மலரும் மொட்டுக்கள்

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE)
செய்திமடல்

மே 2024 ● ● **பதிப்பு -2**

"பால மந்திர் இல்லம்' என்பது எங்கள் நிறுவனத்தின் ஓர் புதிய முயற்சி.இது குழந்தைகளின் கல்வி மற்றும் வளர்ச்சி நலனுக்காக தொடங்கப்பட்டுள்ளது.கின்ஷிப்கேர் திட்டத்தில் உள்ள ஆரம்பக்கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குழந்தைகள் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

சேர்க்கை விதிமுறைகள்:

- ·தமிழ்வழியில் பயிலும் குழந்தைகள் இரண்டாம் வகுப்பிற்குள் மட்டுமே இருக்கவேண்டும். ·ஆங்கில வழிக்கல்வி பயிலும் ஆரம்பக் கல்வி குழந்தைகள் இருக்கலாம்.
- ·மாதத்தில் ஒரு சனிக்கிழமை பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளின் பராமரிப்பாளர்கள் குழந்தைகளை சந்திக்க அனுமதிக்கப்படுவார்கள்.
- ·குழந்தைகளின் கல்வி மற்றும் வளர்ச்சியில் பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் உரிய ஈடுபாட்டுடன் நடந்துக் கொள்ளவேண்டும்.
- ·எங்கள் நிறுவனத்தின் கொள்கையின்படி சத்தான சைவ உணவு மட்டுமே குழந்தைகளுக்கு வழங்கப்படும்.
- ·இந்த திட்டம் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கே பொருந்தும்.





கல்விப்பிரிவு - பாலமந்திரில் பகல்நேர பராமரிப்பு மையம் (Creche), தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியும் உள்ளது.
இங்குள்ள தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் ஆங்கில வழிக்கல்வியில் (English Medium) சிறந்த முறையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. இந்த பள்ளியில், இல்லத்தில் இருக்கும் குழந்தைகள் மற்றும் பாலமந்திரை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள் உட்பட 420 குழந்தைகள் கல்வி கற்று வருகிறார்கள். இப்பள்ளி சிறந்த கட்டமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.இங்கு குழந்தைகளின் முழுமையான வளர்சிக்கு சிறப்பு கவனம் அளிக்கப்படுகிறது. கல்வி கற்ப்பிப்பது மட்டுமின்றி விளையாட்டு, இசை,நடனம், ஆகியவற்றிலும் குழந்தைகளின் திறனை மேம்படுத்த நாங்கள் உதவுகின்றோம்.
இந்த கல்வி ஆண்டிற்கான (2024-25) சேர்க்கை தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றுவருகிறது. ஆர்வமுள்ள பெற்றோர்கள் உங்கள் சமூக பணியாளரை தொடர்புக்கொள்ளவும்.

பெற்றோர்களுக்கான பகுதி

அமைதி காப்பதே பெற்றோரின் பலம்

"உங்கள் குழந்தை கோவமாக, அழுது, கத்தி அடம்பிடிக்கும் போது நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டியவை"

- உங்கள் குழந்தையிடம் ஒரு தவறும் இல்லை. இது ஒரு சகஜமான நடத்தை
- நீங்கள் இந்த நடத்தையை தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

உங்கள் குழந்தை அந்த சமயத்தில் நடந்துக்கொள்ளும் விதத்தை உங்களால் கட்டுபடுத்த முடியாது ஆனால் நீங்கள் நடந்துக்கொள்ள போகும் விதத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியும்.
உங்கள் குழந்தையால் அந்த நேரத்தில் அவனது/அவளது உணர்ச்சிகளைக் கையாள முடியவில்லை, மேலும் உங்கள் உதவி அவன்/ அவளக்கு அப்பொழுது தேவை.



இந்த பக்கத்தின் ஆடியோ பதிப்பைக் கேட்க கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்
https://drive.google.com/file/d/135ur-jJUlmuZUqCIGRiRdM2n8rEzND9o/view?usp=sharing

இந்த எண்ணம் நீங்கள் அமைதியாக இருக்க உங்களுக்கு உதவும். ஏனெனில் இந்த சூழலில் நீங்கள் அமைதி காப்பதே உங்களின் பலம்.

கின்ஷிப் கேர் -KINSHIP CARE

ஜூலை 2021ல் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் தற்போது சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையத்தை சார்ந்த மாவட்டங்களில் 680 குடும்பங்களில் இருந்து 1211 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். 14 மாவட்டங்களில் 12 சமூக பணியாளர்கள் இந்த திட்டத்தில் பணிபுரிகிறார்கள்.

குழந்தையின் வாழ்க்கைத் திறன் மற்றும் தனித்திறன் முன்னேற்றத்திற்கான சேவைகள

1. ஹாப்பி ரீடிங் HAPPY READING PROGRAM

குழந்தைகளின் ஆங்கில மொழித்திறனை வளர்க்கும் நோக்கத்தில் இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக தனது முதல் ஆண்டை நிறைவுச் செய்துள்ளது. இந்த ஒரு வருடத்தில் 415 குழந்தைகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பயனடைந்துள்ளார்கள்.



இதில் 2ஆம் வகுப்பு படிக்கும் குழந்தைகளுக்கு அடிப்படை ஆங்கிலம், அதாவது எழுத்துக்களின் ஒலிகள் மற்றும் ஒலிகளை இணைத்து சொற்களை உருவாக்க கற்பிக்கப்படுகிறது. அவர்கள் இந்த பாடத்திட்டத்தை முடித்தவுடன் ஒரு தன்னார்வலருடன் ஹேப்பி ரீடிங் பாடநெறிக்குச் செல்வார்கள்.

3 முதல் 7 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு மூன்று நிலையில் “ஹேப்பி ரீடிங் பாடநெறி” ஆங்கில மொழித்திறன்’ தொடக்கத்திட்டம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களும் ஆங்கிலத்தில் நல்ல அடித்தளத்தைப் பெற்று தங்கள் பள்ளிப் பாடப் புத்தகங்களைத் தாங்களாகவே படிக்கத் தொடங்குவார்கள்.



2. கை மேல் கல்வி KAI MEL KALVI

கைக்கணினி TAB மூலம் வழிநடத்தப்படும் அடிப்படை ஆங்கில இலக்கணம் மற்றும் அடிப்படை கணிதங்களை வலுப்படுத்த உதவும் வீடியோக்கள் மற்றும் WORK SHEET ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சி மூலம் இதுவரை 53 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

3. ஆலோசனை ஆதரவு COUNSELLING SUPPORT

எங்கள் ஆலோசகர் திருமதி.சுஜாதா அவர்களின் மூலம் பத்தாம் வகுப்பு பயிலும் குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு, பொதுத் தேர்வுகளுக்கு முன், தேர்வுக்கான தயார்நிலை குறித்தும் பொதுத்தேர்வில் வெற்றி பெறுவதற்காக ஊக்கமளிக்கும் வகையில் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

அதுமட்டுமின்றி அடுத்த வருடம் பொதுத்தேர்வு எழுத இருக்கும் ஒன்பதாம் வகுப்பு குழந்தைகளுக்கு தேர்வை துணிச்சலுடன் எதிர்கொள்ளத் தேவைப்படும் யுக்திகள் முன்னதாகவே கொடுக்கப்பட்டது.

வேலூர் மற்றும் கிருஷ்ணகிரியை சேர்ந்த 15 தாய்மார்களுக்கு குழு ஆலோசனை வழங்கப்பட்டது. அதுமட்டுமின்றி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தனிநபர் ஆலோசனையும் வழங்கப்பட்டது.




இந்த பக்கத்தின் ஆடியோ பதிப்பைக் கேட்க கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்

https://drive.google.com/file/d/1_W4ZQUHyTFEbq5_8oH3Rpo3CF3DjfNpA/view?usp=sharing

புதிய சேவைகள்

கோடை விடுமுறையை முன்னிட்டு, பாலமந்திர் கின்ஷிப் கேர், 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு வாரத்தில் 2 நாட்கள் கூகுள் மீட் மூலம் ஹேப்பி ஸ்பீக்கிங் வகுப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வகுப்பு மூலம் ஒவ்வொரு குழந்தையும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுதல், பள்ளி, நண்பர்கள், விளையாட்டு மற்றும் உணவு போன்ற 32 தலைப்புகளில் ஆங்கிலத்தில் பேச பயிற்சி வழங்கப்படுகிறது.

கோவை மையத்தில், தொடக்கப் பள்ளி வயதில் இருக்கும் சில குழந்தைகளுக்கு, தங்கள் தாய்மொழியான தமிழில் படிப்பதிலும் எழுதுவதிலும் சிரமம் இருப்பதால் அவர்களுக்காக சிறப்பு ஹேப்பி ரீடிங் தமிழ் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. இதில் தன்னார்வலர்கள் குழந்தைகளுக்கு தமிழின் அடிப்படையான எழுத்துக்களை அடையலாம் காணுதல் மற்றும் அவற்றின் ஒலிகளை அறிந்து, ஒலிகளை சேர்த்து சொற்களை உருவாக்கவும், எழுதவும் கற்பிக்கிறார்கள்.



இளம் சாதனையாளர்கள்



1. JM. ஆதிக்ஷா - காஞ்சிபுரம்
வெற்றியாளர்
பள்ளிகளுக்கு இடையேயான பேட்மிட்டன் போட்டி



2. S. தார்ஷிதா – சென்னை
1 ஆம் இடம்
தேசிய அளவிலான சிலம்பம் போட்டி



3. S. ஜனனி ஸ்ரீ – ஈரோடு
வெற்றியாளர்
மாநில அளவிலான மேஜைப்பந்து போட்டி



4. A.ஹெலினா – சென்னை
2 ஆம் இடம்
மாநில அளவிலான யோகா போட்டி



5. ஸ்பந்தன – நாமக்கல்
தேசிய கணிதம் மற்றும் அறிவியல் ஒலிம்பியாட்
தேர்வின் வெற்றியாளர்

இந்த பக்கத்தின் ஆடியோ பதிப்பைக் கேட்க கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்
https://drive.google.com/file/d/1V012Mfna4hjnwtRQ1_RFG08jwhrM7znN/view?usp=sharing

செய்தி துணுக்குகள்

மொபைல் ரீசார்ஜ் திட்டம்

ஹேப்பி ரீடிங், கை மேல் கல்வி கைக்கணினி வகுப்பு அல்லது பால மந்திரின் ஏதேனும் ஒரு திட்டத்தில் மொபைல் டேட்டாவை பயன்படுத்தும் குழந்தைகளுக்கு மொபைல் டேட்டா டாப் அப் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை நடைபெறும் இந்த வகுப்புகளில் தவறாமல் கலந்து கொள்ளும் அனைத்து குழந்தைகளும் இந்த சேவையைப் பெறலாம். ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் தாய்மார்கள் பால மந்திரின் மூலம் மொபைல் டேட்டாவை டாப் அப் செய்துக்கொள்ளலாம்.

பள்ளி கட்டணம் செலுத்துதல்

கின்ஷிப் கேர் திட்டத்தின் கீழ் உள்ள குழந்தைகளுக்கு இந்த கல்வியாண்டிற்கான பள்ளி கட்டணம், பாலாமந்திர் நிறுவனத்தால் செலுத்தப்படும். தாய்மார்கள் / பாதுகாவலர்கள் பள்ளிக்கு நேரடியாக கட்டணம் செலுத்த தேவைப்படும் விவரங்களை வழங்க வேண்டும். பள்ளி கட்டணத்தை பெறுவதற்கு குழந்தைகளின் வருடாந்திர அறிக்கை அட்டை / முன்னேற்ற அட்டை ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்கப்படவேண்டும். பாலமந்திர் செலுத்திய தொகைக்கான அசல் பள்ளிக் கட்டண ரசீது உங்கள் மாவட்டத்தில் உள்ள சமூக பணியாளரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

தொலைதூர சமூகப்பணியாளர் அறிமுகம்

ஒரு புது முயற்சியாக செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொலைதூர சமூகப்பணியாளர் பொறுப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பொறுப்பை தேன்கார்த்திகா என்பவர் ஏற்றுள்ளார். இவர் சமூகப் பணியில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவர் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரத்திற்கும் மத்திய ஒருங்கிணைப்பாளராக இருப்பார், மேலும் தொலைபேசி மூலம் குடும்பங்களுக்கு கின்ஷிப்கேரின் சேவைகளை செய்வார்.

இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம்

இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் விதவைப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கும் நோக்கத்துடன் ஓய்வூதியம் வழங்கிவருகிறது . ஓய்வூதியம் பெறப்படும் விண்ணப்பதார் விதவையாக இருக்க வேண்டும், வயது 40 வயது முதல் 79 வயது வரை இருக்க வேண்டும். இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உங்கள் மாவட்டத்தில் உள்ள சமூக பணியாளரை அணுகவும்.

<u>விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்:</u>
1. விண்ணப்பதாரரின் புகைப்படம்
2.ஆதார் அட்டை
3. வயதுச் சான்று
4. ஆதார் ஒப்புதல் படிவம்
5. ஸ்மார்ட் ரேஷன் கார்டு அல்லது ஏதேனும் முகவரி சான்று
6. கணவர் இறப்பு சான்றிதழ்
7. விண்ணப்பதாரரின் சுய அறிவிப்பு
8. விதவை சான்றிதழ்
9. வங்கி பாஸ் புக்
1o. பிபிஎல் அட்டை எண்

இந்த பக்கத்தின் ஆடியோ பதிப்பைக் கேட்க கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்
https://drive.google.com/file/d/1ifLZIG0bThpPf_j-fa-U3VthDKU313EI/view?usp=sharing